සියලු ම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

අධිකරණ අමාත්‍යාංශය
நீதி அமைச்சு
Ministry of Justice

சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களை நியமிப்பதற்கான பரீட்சை- 2023
**Examination for Appointment to the Post of Sworn Translator -2023**

மொழிபெயர்ப்பு (தமிழ்/ ஆங்கிலம்)
**Translation (Tamil/English)**

நேரம் : 1½ மணித்தியாலம்
Duration : 1½ hours

மொத்த புள்ளிகள் : 100
Total Marks : 100

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.
Answer all questions.

---

- பின்வரும் பந்திகளை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கவும்.

**01.** **(i)** ஒலி, ஒளிபரப்பு செய்கின்ற அச்சு ஊடகங்கள் அனைத்தும் தமது தேர்தல் தொடர்பான விடயங்களை தெரிவிக்கும் போது நடுநிலைமையாகவும், பக்கச்சார்பின்றியும் இருத்தல் வேண்டும் என்பதோடு, வானலை நேரத்தை வழங்குகையில் மற்றும் செய்திப் பத்திரிகைகளில் இடத்தை குறித்தொதுக்குகையில் ஏதேனும் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிக்கு / சுயேச்சைக் குழுவிற்கு அல்லது வேட்பாளர் ஒருவருக்கு பாரபட்சம் காட்டுதலாகாது.

**(10 Marks)**

**(ii)** இலங்கையில் உலக சுற்றாடல் தினத்தை நினைவு கூருவதற்காக அதிகளவான அமைப்புக்கள் சுற்றாடல், இயற்கை வள அமைச்சுடன் இணைந்து செயற்படுவதற்கு முன்வந்துள்ளன. கடல் சுற்றாடலுக்கு நேரடியாக பொறுப்பாகவுள்ள அமைப்புக்களும், தரைச் சுற்றாடலுக்கு பொறுப்பாகவுள்ள அமைப்புக்களும் அவற்றின் ஈடுபாடுகளை இந்த மாதத்தில் காட்டும். கடல் சுற்றாடலை பாதுகாப்பதன் முக்கியத்துவம் பற்றி பொதுமக்களுக்கு உணர்வூட்டுவதற்காக பொருட்காட்சிகள், துப்பரவு செய்யும் இயக்கங்கள், மாநாடுகள் என்பவற்றினூடாக இந்த அமைப்புக்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**(15 Marks)**

02. (i) 13(5) ஆம், 13(6) ஆம் உறுப்புரைகளினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமைகளின் பிரயோகமும் தொழிற்பாடும், தேசிய பாதுகாப்பின் நலன்கருதி சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு மட்டுமே அமைந்தனவாதல் வேண்டும். இப்பந்தியின் நோக்கங்களுக்காக "சட்டம்" என்பது பொதுமக்கள் பாதுகாப்புப் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளையும் உள்ளடக்கும்.

**(10 Marks)**

**(ii)** நான்காம் பிரிவின் கீழ் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் பணத்தொகைகளை வழங்கும் நோக்கத்திற்காக, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சர், வட்டியீட்டாத மற்றும் கைமாற்றத்தக்கனவல்லாத வாக்குறுதிப் பத்திரங்களை அல்லது கடப்பாடுகளை அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் உருவாக்கி இலங்கை மத்திய வங்கிக்கு வழங்குவதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கடன்களைத் திரட்டலாம். வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க உருவாக்கப்பட்டு வழங்கப்பட்ட எவையேனும் வாக்குறுதிப் பத்திரங்களை அல்லது கடப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கும் வைத்திருப்பதற்கும் இலங்கை மத்திய வங்கிக்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

**(15 Marks)**

- **Translate the following passages into Tamil**

**03. (i)** In every case in which an offender is punishable with imprisonment which may be of either description, it shall be competent for court which sentences such offender to direct in the sentence that such imprisonment shall be wholly rigorous, or that such imprisonment shall be wholly simple, or that any part of such imprisonment shall be rigorous and the rest simple.

**(10 Marks)**

**(ii)** Protection and caring for the environment has become more important today than ever before. Global warming, freshwater depletion, biodiversity reduction and depletion of the ozone layer are often cited as key threats to the environment globally. Sri Lanka, like many other emerging countries, has also to confront the wide range of environment challenges that are associated mainly with its economic development. Severe land degradation, poor management of water resources, impacts of large scale deforestation and destruction of wildlife and plant habitats, loss of biodiversity, coastal erosion, scarcity of water, air pollution, inadequate facilities for waste disposal and loss of agricultural productivity are among the key issues related to the environment in the Sri Lankan context. **(15 Marks)**

**04. (i)** **<u>PROCLAMATION BY HIS EXCELLENCY THE PRESIDENT</u>**

KNOW YE that by virtue of the powers vested in me by article 70 of the Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka, I, Mahinda Rajapaksa, President, do by this Proclamation summon Parliament to meet at the Parliament Hall, Sri Jayawardenapura on the Twenty Second day of April, Two Thousand and Ten at 11.00 a.m.

Given at Colombo, this 31st day of March, Two Thousand and Ten.

By order of His Excellency,
Lalith Weeratunga,
Secretary to the President.

**(10 Marks)**

**(ii)** There shall be a Governor for each Province for which a Provincial Council has been established in accordance with Article 154A. Subject to the preceding provisions of this Article, the Governor shall hold office for a period of five years from the date he assumes office. Every person appointed as Governor shall assume office upon taking or subscribing the oath or making or subscribing the affirmation, set out in the Fourth Schedule, before the President. The Governor shall exercise his powers under this paragraph in accordance with the advice of the Chief Minister, so long as the Board of Ministers commands, in the opinion of the Governor, the support of the majority of the Provincial Council.

**(15 Marks)**